பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

08 05 2026 FRIDAY 6 30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் த.வெ.க, புதிய அரசு அமைப்பதற்கு இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் நிபந்தனையற்ற ஆதரவு தெரிவித்துள்ளன.

2. விடுதலை சிறுத்தைகள் கட்சியும் தங்களது நிலைப்பாட்டிற்கு ஆதரவளிக்கும் என்று அக்கட்சிகள் அறிவித்துள்ளன.

3. புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகளை மாநில ஆளுநர் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று திமுக வலியுறுத்தியுள்ளது.

4. தமிழக மக்களின் விருப்பத்தையும், தேர்தல் முடிவுகளையும் உளமாற மதிப்பதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

5. உலக கோப்பை வில்வித்தை போட்டியில், இந்தியாவின் Simranjith Kaur, Sahil Jadhav அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் த.வெ.க புதிய அரசு அமைப்பதற்கு தலா இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் நிபந்தனையற்ற ஆதரவு தெரிவித்துள்ளன.

இன்று சென்னையில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆலோசனைக் கூட்டத்திற்குப் பின்னர், ஆதரவுக் கடிதம் த.வெ.க. நிர்வாகி திரு. நிர்மல்குமாரிடம் வழங்கப்பட்டது.

இதேபோல், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் த.வெ.க அரசமைக்க ஆதரவு தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. சண்முகம் கூட்டாக செய்தியாளர்களிடம் பேசினர்.

*த.வெ.கவிற்கு ஆதரவு அளித்துள்ள இடதுசாரி கட்சிகள் அமைச்சரவையில் பங்கேற்காது என்றும் அவர்கள் கூறினர்.*

*விடுதலை சிறுத்தைகள் கட்சியும் தங்களது அரசியல் நிலைப்பாட்டை ஏற்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.*

*த.வெ.க. அரசமைக்க ஆதரவளிப்பது என்பது அக்கட்சியுடன் கூட்டணி அல்ல என்றும் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடதுசாரி கட்சிகள் நீடிக்கும் என்றும் அவர்கள் தெளிவுபடுத்தினர்.*

*சட்டப்பேரவை தேர்தலில், த.வெ.க விற்கு வாய்ப்பளித்து மக்கள் முன்மொழிந்ததை, இடதுசாரி கட்சிகள் வழிமொழிவதாகவும் திரு. சண்முகமும், திரு. வீரபாண்டியனும் தெரிவித்தனர்.*

*தமிழக சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்காத நிலையில், த.வெ.க 108 தொகுதிகளில் வெற்றிபெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது.*

*அக்கட்சி அரசமைக்க 5 உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸ் கட்சியும் ஆதரவு அளித்தது.*

*திரு. விஜய் இரண்டு தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ள நிலையில், அவர் அரசமைக்க தற்போது இடதுசாரி கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளதால், த.வெ.க மற்றும் அதற்கு ஆதரவு தெரிவிக்கும் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 116ஆக அதிகரித்துள்ளது.*

*பெரும்பான்மைக்கு இன்னும் 2 இடங்கள் தேவைப்படுகிறது.*

*விடுதலை சிறுத்தைகள் கட்சியும் ஆதரவை அறிவிக்கும்பட்சத்தில், த.வெ.கவிற்கு பெரும்பான்மை பலம் கிடைத்துவிடும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*இதற்கிடையே, புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகளை ஆளுநர் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று திமுக தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொள்வதற்கும், மாநிலத்தின் நலனை*

முன்னெடுத்து செல்வதற்கும், புதிய அரசு அமைய வேண்டியது காலத்தின் கட்டாயம் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக பிஜேபி அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருவதாக அக்கட்சியின் மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், சட்டப்பேரவை தேர்தல் முடிவுகளை பிஜேபி மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழக மக்களின் விருப்பத்தையும், தேர்தல் முடிவுகளையும் உளமாற மதிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன் காரணமாக, தமிழகத்தில் புதிய அரசு அமைப்பதற்கான எந்தவொரு முயற்சியிலும் பிஜேபி தன்னை இணைத்துக் கொள்ளாது என்றும் திரு. நயினார் நாகேந்திரன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

த.வெ.கவிற்கு அமமுக ஆதரவு அளித்திருப்பதாக வெளியான செய்திகள் தவறானவை என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அமமுக சார்பில்மன்னார்குடியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற திரு. காமராஜ், அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்களுடன் புதுச்சேரி தனியார் விடுதியில் தங்கியிருப்பதாக கூறியுள்ளார்.

உண்மை நிலை இவ்வாறிருக்க அடிப்படை ஆதாரமற்ற செய்திகளை வெளியிடுவதை ஊடகங்கள் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிப்பது என்ற நிலைப்பாட்டில் அமமுக உறுதியுடன் உள்ளதாகவும் திரு. டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

த.வெ.க.-வுடன் காங்கிரஸ் தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணி வைத்துள்ளது ஏற்புடையதல்ல என்று அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. மணிசங்கர் ஐயர் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்துள்ள பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், காங்கிரஸ் கட்சியின் இந்த நடவடிக்கை கண்ணியமற்றது என்று குறை கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாக த.வெ.க. தலைவர் திரு. விஜய் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், கடின உழைப்பிற்கு கிடைத்த அங்கீகாரம் இந்த வெற்றி என்று குறிப்பிட்டுள்ளார்.

உயர்கல்வி என்னும் அடுத்த கட்டத்தை நோக்கி, நம்பிக்கையுடன் பயணிக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த தேர்வில் வெற்றிபெற தவறியவர்கள் மனம் தளராமல் மீண்டும் முயற்சிக்குமாறும் திரு. விஜய் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

சிவகங்கை மாவட்டம், மறவமங்கலம் கண்மாயில் மீன்பிடி திருவிழா இன்று நடைபெற்றது.

இதில் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – முருகன் 44 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 7 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட - வி.ஆர். துரை 58 செகண்டஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற செஞ்சிலுவை தின நிகழ்ச்சியில், ஆட்சியர் திருமதி. சிவசௌந்தரவல்லியிடம் 12 லட்சம் ரூபாய் மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள், மலைகிராமங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்காக வழங்கப்பட்டது.

>>>>>><<<<<<

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அருகேயுள்ள திருமூர்த்திமலை பஞ்சலிங்க அருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால், அங்கு சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மனின் சுதந்திரப் போராட்ட வரலாறு குறித்து, கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள புகைப்படங்களை ஆட்சியர் திரு. விஷூ மஹாஜன், காவல்துறை கண்காணிப்பாளர் திரு. மதன் ஆகியோர் இன்று பார்வையிட்டனர்.

>>>>>><<<<<<

வீரபாண்டி கௌமாரியம்மன் திருவிழாவை முன்னிட்டு, தேனி மாவட்டத்திற்கு வரும் 15ஆம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை வில்வித்தை போட்டியில், இந்தியாவின் Simranjeet Kaur, Sahil Jadhav அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

சீனாவின் Shanghai-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில், Simranjeet Kaur, 6-0 என்ற புள்ளிக்கணக்கில் சீன தைபேயின் Fong You Jhu-வை வென்றார்.

*ஆடவர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Sahil Jadhav, 149-147 என்ற புள்ளிக்கணக்கில் ஆஸ்திரியாவின் Nico Wiener-ஐ வென்றார்.*

*>>>>>><<<<<<*

*உலக ஸ்குவாஷ் சாம்பியன் போட்டி, எகிப்தின் Giza-வில் இன்று தொடங்கியது.*

*இந்தியாவின் சார்பில் அபே சிங், Veer Chotrani, வேலவன் செந்தில்குமார், Ramit Tandon உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.*

*>>>>>><<<<<<*

*17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து போட்டியில் இந்தியா 4-0 என்ற கோல்கணக்கில் லெபனானை வென்றது.*

*சீனாவின் Suzhou-வில் நடைபெற்ற இப்போட்டியில், Pritika Barman இரண்டு கோல் அடித்தார். Alva Devi மற்றும் Joya தலா ஒரு கோல் அடித்தனர்.*

*>>>>>><<<<<<*

*மெக்ஸிகோ சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Shriyanshi Valishetty காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் இரட்டையர் பிரிவுகளில் கிருஷ்ண பிரசாத் கரகா - பிரித்வி கிருஷ்ணமூர்த்தி ராய், துருவ் ராவத் - Suraj Goala, Arjun Reddy - Achutatitya Rao இணைகளும், கலப்பு இரட்டையர் பிரிவில் துருவ் ராவத் - மனிஷா இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.*

*>>>>>>END<<<<<<*